057

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் (சிறப்பு) கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 06

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNE6546/ESE6246– உள்ளடங்கல் வகுப்பறை மாணவர்களுக்கான கலைத்திட்ட விருத்தியும் தழுவலும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- **09.12.2023** நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டில் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அடிப்படை கல்வித் திறன் மற்றும் நடத்தை விதிமுறைகள் என்பதன் பொருளை சுருக்கமாக விவரிக்குக.
2. பொருத்தமான உதாரணங்களை மேற்கோள் காட்டி உங்கள் சொந்த மொழிநடையில் கற்பித்தலின் வேறுபடுத்தல் என்பதன் பொருளை விளக்குக.
3. இலங்கையில் உள்ள பாடசாலை அமைப்பில் மாணவர்களின் கற்றலுக்கான உலகலாவிய வடிவமைப்பைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குக.
4. உத்வரி – ஸ்லோனர் (1995) விளக்கிய கலைத்திட்டத் தழுவலை இரண்டு (02) எடுத்துக்காட்டுக்களுடன் உங்கள் சொந்த மொழிநடையில் விளக்குக.
5. வேறுபட்ட கற்பித்தலுடன் தொடர்புடைய குறைந்தபட்சம் மூன்று (03) கோட்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை (01) பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
6. கற்றலுக்கான உலகலாவிய வடிவமைப்பின் மூன்று (03) கொள்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக.
7. பல்நுண்மதிக் கோட்டிபாட்டிற்கு ஏற்ப கற்றல் பாணி எனும் பொருளை விளக்குக.
8. கற்றலுக்கான உலகளாவிய வடிவமைப்பை நடைமுறைப்படுத்தும் போது இலங்கையில் உள்ளடங்கிய வகுப்பு ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** தற்போதைய பாரம்பரிய கல்வி முறையானது “ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தும்” (One Size fits all) எனும் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது.
கல்வி நடைமுறைகளில் “அனைவருக்கும் ஒரு அளவு பொருந்தும்” என்ற அணுகுமுறையால் நீங்கள் எதனைக் கருதுகின்றீர்கள்? **(05 புள்ளிகள்)**

**ii.** உள்ளடங்கல் வகுப்பறையில் பல்வகைத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்குக் கற்பிப்பதில் "ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தும்" எனும் அணுகுமுறையைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை? **(07 புள்ளிகள்)**

**iii.** இலங்கைக் கல்வி முறைமையில் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு அணுகுமுறையை மாற்றியமைப்பதில் உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

**(08 புள்ளிகள்)**

10.

**i.** பொருத்தமான உதாரணங்களை மேற்கோள் காட்டி பெஞ்சமின் ப்ளூமின் பாகுபாட்டை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** ஒரு உள்ளடங்கல் வகுப்பறையில் பல்வகைத் தேவைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடமொன்றிற்கு ப்ளூமின் வகைப்பாட்டின் மூன்று (03) ஆட்சிகளையும் அடையக்கூடிய வகையில் மூன்று (03) நோக்கங்களை உருவாக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்துள்ளமையை மதிப்பிடுவதற்கும், எவ்வாறு வினாக்களை உருவாக்கலாம் என்பதை மூன்று (03) பொருத்தமான உதாரணங்களை (ஒவ்வொரு ஆட்சிக்கும் ஒவ்வொரு வினா வீதம்) முன்வைப்பதன் மூலம் அவற்றை விளக்குக. **(07 புள்ளிகள்)**

11.

**i.** வகுப்பறையில் மாணவர்களின் பல்வகைத் தேவைகளுக்கு ஏற்ப கலைத்திட்டத்தின் உள்ளடக்கங்களை வேறுபடுத்துவதற்கான வழிகளை விளக்குக. **(06 புள்ளிகள்)**

**ii.** வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான உலகளாவிய வடிவமைப்பு ஆகியவற்றிற்கிடையேயான தொடர்புகளை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** இலங்கைப் பாடசாலைச் சூழலில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில் உலகளாவிய வடிவமைப்பின் கொள்கைகளை எவ்வாறு நாம் பயன்படுத்த முடியும் என்பதை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

12.

**i.** லெவ் வைகோட்ஸ்கி (Lev Vygotsky) முன்வைத்த அண்மை விருத்தி வலயக் (Zone of Proximal Development) கோட்பாட்டை விவரிக்குக.

(06 புள்ளிகள்)

**ii.** ஒரு உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, அறிவுசார் குறைபாடுகள் உள்ள மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயல்முறைக்கு அண்மை விருத்தி வலயக் கோட்பாட்டின் கொள்கைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்.

(07 புள்ளிகள்)

**iii.** உள்ளடங்கல் வகுப்பறையில் அண்மை விருத்தி வலயக் கொள்கைகளை திறம்பட பயன்படுத்தும் போது இலங்கையில் உள்ளடங்கிய வகுப்பறை ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

(07 புள்ளிகள்)

13.

**i.** வினைத்திறனுள்ள உள்ளடங்கற் பயிற்சி என்பதன் மூலம் நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள்? அவற்றைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** வெற்றிகரமான உள்ளடங்கற் கல்வியில் விருத்தி செய்யாத பாடசாலை அதிபர்களின் பயனற்ற நடைமுறைகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** “பல்வேறுபட்ட உள்ளடங்கல் நடைமுறைகளைப் பயன்படுத்தி பல்வகைத் தேவைகளை விலாசப்படுத்தும் திறன் ஆசிரியர்களுக்கு வெவ்வேறு வழிகளில் பலன்களைத் தரும்”

மேலே உள்ள கூற்றை எடுத்துக்காட்டுக்களுடன் நியாயப்படுத்துக.

**(09 புள்ளிகள்)**

14.

**i.** பொருத்தமான உதாரணங்களை மேற்கோள்காட்டி இடமளித்தல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியனவற்றின் ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை ஒப்பிட்டு ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**ii.** பல்வகைத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு உள்ளடங்கல் வகுப்பறைக்கான இடமளித்தல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியனவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான இடமளித்தல் மற்றும் மாற்றியமைத்தல் செயற்பாட்டில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

**(07 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*